உ
கணபதி துணை

மயிலிட்டி வடக்கு, கொழுவியங்கலட்டி

# அருள்மிகு விநாயகர் ஆலய

# சித்திரத்தேர் சிறப்பு மலர்



1-9-1979


ஆசிரியர் :

கிரியா வித்தகர்

சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள்

ஆலய பரிபாலன சபை

மயிலிட்டி வடக்கு

காங்கேசன்துறை



சக்தி அச்சகம்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி

சுன்னாகம்

உ
கணபதி துணை




## மயிலிட்டி வடக்கு, கொழுவியங்கலட்டி

## அருள்மிகு விநாயகர்


# சித்திரத்தேர் சிறப்பு மலர்

1979

சக்தி அச்சகம்
66, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.



புராதனகாலந்தொட்டு
அடியார்களுக்கு அருள்பாலிக்கும்
மூலமூர்த்தி விநாயகர்



வெள்ளிக் கலசம் பூட்டிய
கொடிமர தேவரும்
மூலாதார கணபதியும்



மூர்த்தி விநாயகர்

## தியான சுலோகம்

கஜாநநம் பூத கணதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்.

யானை முகத்தனை, உயிர்க்கூட்டங்களினாலே சேவிக்கப்படுபவனை, விளாம்பழ நாவற்பழ இரசத்தை அருந்துபவனை, உமையின் மைந்தனை, துயரத்தை அழிக்க ஏதுவாயிருப்பவனை, விக்கினங்களை யெல்லாம் அழிப்பவனை - அவனுடைய தாமரைத் திருவடிகளில் வணங்குகிறேன்.

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

கணபதி சிவன்மகன், ஞானக்கொழுந்து, ஐங்கரன், யானை முகத்தன், இளம்பிறைக் கொம்பன் - அவனை எனது புத்தியாகிய கோயிலில் வைத்துத் தியானத்தால் போற்றுகிறேன்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

இலங்கையின் வடபகுதியில் உள்ள கொழுவியங் கலட்டி விநாயகராலயத்திற்கு அவ்வூர்ப் பெருமக்களால் சித்திரத்தேர்த் திருப்பணி நிறைவேற்றப்பட்டுக் கூடிய விரைவில் வெள்ளோட்ட விழா நடைபெறவுளது மகிழ்ச்சிக்குரியது. வெவ்வினையை வேரறுக்க வல்ல வேழமுகத்து விநாயகப் பெருமானுக்கு, நடைபெறும் இத் தேர்த் திருப்பணி இனிது நிறைவேற வாக்கும், நல்ல மனமும், மாமலராள் நோக்கும், நுடங்கா மேனியும் அவன் அருளால் பெற்று, விக்கினமின்றி நிறைவேற்ற அவன் திருவடி வழுத்தி ஆசி கூறுகின்றோம்.

*நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்,*
*நல்லூர்;*
*11-7-79,*

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய
ஸ்வாமிகள்

உ
சிவமயம்

# பண்டிதர் இ. நமசிவாயம் J. P. அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

பொருள் படைத்தவர்கள் புண்ணிய கருமங்களைச் செய்தல்வேண்டும். புண்ணியங்களிற் சிறந்தது சிவபுண்ணியம். ஆலயமமைத்தல், நிருவகித்தல் ஆதியன சிவபுண்ணியங்கள். புதிதாக ஆலயம்மைத்தலிலும், பழைய ஆலயத்தைத் திருத்துதல் அதியுயர்ந்த சிவபுண்ணியம். இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் விசேடமாக யாழ்ப்பாணப் பகுதியில் பழைய ஆலயங்களைத் திருத்துதலாகிய இச் சிவபுண்ணியம் இக்காலத்தில் பெருகிவருதல் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

மயிலிட்டி வடக்கு, கொழுவியன்கலட்டி விநாயகர் ஆலயம் இற்றைக்குச் சில ஆண்டுகளின் முன்பிருந்து பகுதி பகுதியாகத் திருத்தப்பட்டும் புதுக்கப்பட்டும் வருகின்றது. தேரில்லாத குறையும் தீர்க்கப்பட்டுவிட்டது. இத்தனை சிறப்புக்கும் காரணம் அவ்வாலயத் திருப்பணிச் சபையாரின் தளராத முயற்சியும், அவ்வாலயத்தைச் சேர்ந்த பொதுமக்களின் மனமுவந்த பணவுதவி, பொருளுதவி, சரீரவுதவிகளுமாகும்.

புதிதாக ஆக்கப்பெற்ற, அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சித்திரத்தேர், குரும்பசிட்டி, கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் உத்தம சீடரும், மயிலிட்டி வடக்கு, சரவணமுத்து ஆச்சாரியாரின் முதற் புதல்வனும், இருபத்தைந்து வயது இளைஞருமாகிய சிற்பாசாரியார் ஜெயராசாவைத் தலைவராகக்கொண்ட சிற்பாசாரிமார் குழுவினால் அமைக்கப்பட்டது. அத்தேர் அச் சிற்பாசாரிமாரின் கலைத்திறனை என்றும் எடுத்துக்காட்டும்.

இச் சிவகைங்கரியத்திற் பங்குகொண்ட யாவரும், தன் பாதங்களை நினைப்பவரது விக்கினங்களை எல்லாம் நீக்கிக் காக்கின்ற விநாயகப் பெருமான் திருவருளால் எல்லா நன்மைகளும் பெற்று என்றும் நன்றே வாழ அப்பெருமான் திருவடித் தாமரைகளை மனத்திலமைத்து வாழ்த்துவோமாக.

மயிலிட்டி தெற்கு,
5-7-79.

இங்ஙனம்,
இ. நமசிவாயம்

உ
சிவமயம்

# கிரியா வித்தகர் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள்

வழங்கிய

## ஆசியுரை

சகல ஆன்ம கோடிகளையும் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்தருளுபவரும் உருவத் திருமேனியைத் தாங்கி அருள்புரிபவரும் கொழுவியங்கலட்டிப் பதியிற் புராதன காலந்தொடக்கம் கோயில்கொண்டு எழுந்தருளி இருப்பவருமாகிய விநாயகப் பெருமான் திருவீதி உலாவருவதற்காகச் சிற்ப சாஸ்திர முறைப்படி வேலைப்பாடுகள் ஒருங்கே அமையப்பெற்றதும், பார்ப்பவர் மனதைவிட்டு அகலாத மிகுந்த அழகுபெற்றதும், மிகக் கம்பீரமாக அமைந்ததுமாகிய இந்தத் திருத்தேரை விநாயகப் பெருமானின் திருவருள்கொண்டு செய்துமுடித்த கொழுவியன்கலட்டிவாழ் பெருங்குடி மக்களுக்கும், இத் தேரை உருவாக்கித்தந்த பிரதம சிற்பாசாரியார் திரு. ச. ஜெயராசா அவர்களுக்கும் உதவிச் சிற்பாசாரிமார்களுக்கும், இத் தெய்வீகத் திருப்பணிக்குப் பொருளுதவி புரிந்த பெரியோர்களுக்கும், சரீர உதவிபுரிந்த பெரியோர்களுக்கும், சகல வகையிலும் உதவிசெய்த அன்பர்கள் எல்லோருக்கும் விநாயகப் பெருமானுடைய பரிபூரண கிருபையால் அட்ட ஐஸ்வரியங்களும் உண்டாவதாகுக!

ஸர்வே ஜநாஸ் சுகினோ பவந்து
சமஸ்த்த சன் மங்களானி பவந்து
லோகா சமஸ்தாஸ் சுகினோ பவந்து.

5-7-79,
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள்
தேவஸ்தான பிரதம குரு



பிரதம குருக்கள்
கிரியாவித்தகர், குருமணி
சிவத்திரு. க. சிவபாதசுந்தரக்
குருக்கள் அவர்கள்

# ஆனந்தப் பேறு தருவாய்!

நேயமிகு சைவநெறி நீளுலகி லேபெருக
நேர்மைவளர் நீதி பெருக
நெடுமாரி கொண்டுவள நிதிபெருகக் கலைபூத்த
நிறையறிவு சீலர் பெருக
தூயசமு தாயத்தி னொளிபெருகத் தெய்விகத்
துணைபெருகி அன்பு பெருகச்
சுருதியுட னாகமபு ராணவிதி காசங்கள்
தோய்ந்துவரு பண்பு பெருகக்
காயமன வாக்கினாற் கருதுசிவ புண்ணியக்
கடமைபுரி தொண்டர் பெருகக்
கற்பகத் தேரேறிப் பொற்புமிளிர் வீதிவரும்
கணநாத கஜ வதனனே
ஆயதவ மேவுநின தடியிணைப் பணிபுரியும்
ஆனந்தப் பேறு தருவாய்
அழகுதரு வடமயிலைக் கொழுவியங் கலட்டியுறை
அருள் விநாயக மூர்த்தியே!

அளவெட்டி,
12-7-79.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

# மாதவஞ் செய்தோம்!

முழுமுதற் பொருளா யுள்ள
மூர்த்திதன் னடியா ரின்னல்
முழுவதும் போக்கி யாளும்
மோதக ஞானி மன்னுங்
கொழுவியங் கலட்டி மேவுங்
குஞ்சரப் பிள்ளை தாவில்
எழில்மிகு தேரி லன்பர்
இன்புற எழுந்தார் போற்றி!

உமைசிவ னுவந்து வாழ்த்த
வுலகங்க ளனைத்து மேத்த
வமரர்கள் மலர்கள் தூவ
வரம்பையர் நடன மாடக்
குமிழ்சிரிப் பருளி நாளுங்
கொழுவியங் கலட்டி மேவுங்
கமழ்புகழ் ஐயன் தேரிற்
கவினுற விவர்ந்தார் போற்றி!

முன்னொரு போது தாதை
முப்புர மெரித்தல் வேண்டி
மன்னுயர் தேரிற் சென்றான்
கொழுவியங் கலட்டி வைகும்
மூன்னவர் தாமு மன்பர்
மும்மலம் போக்கி யாள
வன்னச்சித் திரத்தேர் கொண்டார்
மாதவஞ் செய்தோம் வாழி.

— கவிஞர் வி. கந்தவனம்



பிரதம ஸ்தபதியார்
செல்வன் ச. ஜெயராசா அவர்கள்

உ
கணபதி துணை

ஈழத்தின் கலைச்செல்வன் கலாகேசரி
**ஆ. தம்பித்துரை அவர்களின்**
மாணுக்கனும்
**கா. சரவணமுத்து ஆசாரியார் அவர்களின்**
சிரேஷ்ட புத்திரனுமாகிய

# ஜெயராசா ஸ்தபதியார் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
  பெருங்கோயி லெழுபதினே டெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
  கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
  இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
  தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

எனக் கோயில் அமைப்பு முறைகளைப்பற்றி அப்பர் சுவாமிகள் அழகாகக் கூறியுள்ளார். இப்பாடலில் கூறப்பட்டுள்ள கரக்கோயில் என்பது தேர் வடிவமாகச் சக்கரங்களொடு அமைக்கப்படுவது. தேர் கோயில்களுக்குரிய பொருட்களில் மிகவும் முக்கியமான தொன்ருகும். இது அரசர் ஊர்ந்து செல்வதற்கும் சுவாமிகள் பவனி வருவதற்கும், யுத்தகாலங்களில் அரசர்கள் போருக்குப் போவதற்கும் பயன்படுகிறது. தேரினது லட்சணத்தைப்பற்றிச் சிற்ப நூல்களில் விரித்துக் கூறப்படுகிறது. தேரின் சில்லினது அமைப்பையும், பல உறுப்புக்களைப்பற்றியும், பலவகையான அளவுகள், அமைப்புக்கள் பற்றியும், அதில் விளங்கும் வேலைப்பாட்டுத் திறமைபற்றியும் விபரமாகக் கூறப்படுகிறது. இதில் நாகரம், திராவிடம், வேஸரம் என மூன்றுவகையான அமைப்புக்கள் பற்றிக் கூறப்படுகிறது.

நாகரம் என்பது சதுர வடிவமானது. திராவிடம் என்பது எண்கோண வடிவமானது. வேஸரம் என்பது வட்ட வடிவமானது. வட்ட வடிவமான தேர் விநாயகப் பெருமானுக்கு உகந்தது.

கொழுவியங்கலட்டி வாழ் பெருமக்கள் விநாயகப் பெருமானுக்குச் சித்திரத்தேர் ஒன்று உருவாக்கித்தருமாறு பணித்தார்கள். இது பெருமானது திருவருள்போலும் என்று அந்த வேலையைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். விநாயகப் பெருமானது திருவருளை முன்வைத்துத் தை மாதத்திலே வேலையை ஆரம்பித்தேன். பெருமானது பெருங்கருணைத் திருவருளினால் எவ்வித விக்கினமுமின்றி வேலைகள் இனிது நிறைவேறின. இன்று அந்தச் சித்திரத் தேரிலே விநாயகப் பெருமான் இவர்ந்து பவனி வருகின்ற நன்னாள். இந் நாளிலே நாமெல்லாம் திரிகரண சுத்தியோடு விநாயகப் பெருமானை வணங்கி அருள்பெற்றுக் கொள்வோமாக.

*சரவணன் கவின் கலையகம்,*
*மயிலிட்டி,*
*காங்கேசன்துறை.*
*14-7-79*

பிரதம ஸ்தபதியார்
**ச. ஜெயராசா**

1988-04-08 விநாயகர் அபிஷேகம்

உ
சிவமயம்

# மயிலிட்டி வடக்கு, கொழுவியன்கலட்டி
# அருள்மிகு விநாயகர் ஆலயத்தின்
# சரித்திரம்

மேற்படி ஆலயம் மிகவும் பழமைவாய்ந்தது. இவ்வாலயம் எம் முன்னேரால் ஓலையால் வேயப்பட்டு ஒரு மட ஆலயமாக இருந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

அதன் வடக்குப் பக்கமாக ஒரு கற்கேணி இருந்தது. அதில் ஆடு மாடுகள்தான் தண்ணீர் குடித்துவந்தன. அது தூர்ந்துபோகும் நிலையில் இருந்தது. இந்த ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து சிரமதான மூலம் கேணியின் அடிப்பகுதியைக் கிணருகக் கட்டி முடித்தார்கள்.

அதன்பின் மயிலிட்டி, பலாலி இன்னும் அயற்கிராம மக்களும் சேர்ந்து 1941 ஆம் ஆண்டுவரையில் ஒரு அசையாமணி செய்வித்து வைத்தார்கள். திரு. கருணுகரக் குருக்கள் அவர்களினல் ஊஞ்சல் பாட்டும் பாடப்பெற்றது.

அந்தக்காலத்தில் வீர சைவ பரம்பரையைச் சேர்ந்தவர்களாகிய ஆறுமுகையர், சபாபதி ஐயர், கந்தையா ஐயர், சுப்பையா ஐயர் ஆகியோரின் சந்ததியினர் கோயிற் பூசகர்களாக இருந்தனர்.

1914 ஆம் ஆண்டு இவ்வாலயம் இடிக்கப்பட்டு கட்டிட சிற்பாசாரி ஆறுமுகம் சந்ததியினரால் சிரமதானமூலம் புதிதாகக் கட்டி முடிக்கப்பெற்றது. 1950 ஆம் ஆண்டு பிரமஸ்ரீ தற்பரானந்தக் குருக்கள் அவர்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு தினசரி இரண்டு காலப் பூசையும் நடைபெற்றுவந்துள்ளது. இவரின்பின் திரு, சொக்கலிங்கக் குருக்கள் பூசகராக இருந்தார். அவரின்பின் மயிலிட்டி தெற்கு சைவமடத்தைச் சேர்ந்த கந்தையா சிவபாதசுந்தரக் குருக்கள் பொறுப்பேற்று 1965 ஆம் ஆண்டு இரண்டாவதுமுறை கும்பாபிஷேகம் செய்து தொடர்ந்து பூசகராக இருக்கின்ருர்.

1977 ஆம் ஆண்டு இவ்வூர் மக்களும் அயலூர் மக்களும் சேர்ந்து கொடிஸ்தம்பம் செய்வித்தனர். தற்போது கொடியேற்றி பத்துத் திருவிழாக்களும், விசேட உற்சவங்களும், மூன்றுகாலப் பூசையும் நடைபெற்றுவருகிறது. அதுமட்டுமல்லாது மார்கழி மாதத்தில் பத்துநாள் அபிஷேகம் நடைபெற்றுத் திருவாதிரைத் தினத்தன்று அழகிய கட்டுத் தேரில் விநாயகப் பெருமான் வீதிவலம் வருதலும் அன்றையதினமே தீர்த்தோற்சவம் நடைபெறுதலுமுண்டு.

1978 ஆம் ஆண்டு தைப்பூசத் தினத்தன்று ஒரு சித்திரத்தேர் செய்ய ஆரம்பமாகித் தற்பொழுது வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. இச் சித்திரத்தேர் வெள்ளோட்டம் 1-9-79 இல் திரு. மு. நாகலிங்கம் சரவணமுத்துவின் மகன் ஜெயராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. தச்சுவேலையை அவ்வூரைச்சேர்ந்த ஆசாரியர்கள் முருகர், வயிரவி, மு. நாகலிங்கம், வேலுப்பிள்ளை, கனகர் இன்னும் அவர்களின் இனபந்துக்களும் செய்கின்றனர்.

கொழுவியங்கலட்டி அருள்மிகு விநாயகர் ஆலயத்தை மயிலிட்டி வடக்கு, பலாலி, காங்கேசன்துறை இன்னும் அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் பரிபாலனம் செய்கின்றனர்.

இங்ஙனம்,

**ஆலய பரிபாலன சபையினர்**

# விநாயகர்

## க. சிவபாதசுந்தரக் குருக்கள்

கஜமுகாசுரன் சிவபெருமானை நோக்கித் தவம்செய்தான். சிவபெருமான் தோன்றி ''நீ வேண்டும் வரங்களைக் கேட்குதி'' என்றார். கஜமுகராசன் பெருமானுடைய பாதாரவிந்தங்களை வணங்கி இந்த உலகத்திலுள்ள எந்த வகையான ஜீவராசிகளினாலும் நான் இறக்காது இருக்கவேண்டும்; எல்லா உலகங்களையும் நான் அரசாளவேண்டும்; தேவர்கள் எல்லாம் என்னை வந்து வணங்கவேண்டும் என்று வரங்களைக் கேட்டான். சிவபெருமான் அவற்றையெல்லாம் கொடுத்தார். கஜமுகாசுரன் மீண்டும் இறைவனது பாதங்களை வணங்கி ''எம் பெருமானே உங்களுடைய சூழ்ச்சியினாலே அடியேன் இறக்க நேரிட்டாலும் தங்களது பாதாரவிந்தத்தைப் பிரியாத பேறும் தந்தருளவேண்டும்'' என்று கேட்டான். இறைவனும் அவ்வாறே ஆகுக என்றுகூறி மறைந்தார். இறைவனுடைய திருவருளினால் சகல செல்வங்களையும் பெற்று அரசாட்சி செய்துவருகின்றான் கஜமுகாசுரன். தேவர்களை அழைத்துத் தன்னுடைய சபையில் நீங்கள் நாள்தோறும வந்து மும்முறை குட்டித் தோப்பிக்கறணம்போட்டு வணங்க வேண்டுமென்று கட்டளையிட்டான். இவனுடைய கட்டளையை மீறி நடக்க அஞ்சிய தேவர்கள் ஒவ்வொரு நாளும் கஜமுகாசுரனை வணங்கிவருவாராயினர். இவ்வாறாக கஜமுகாசுரன் செய்யும் துன்பங்களைப் பொறுக்கமுடியாத தேவர்கள் இறைவனிடம கூறித் தங்களைக் காத்து இரட்சிக்கும்பொருட்டு வேண்டுதல் செய்தார்கள். இறைவன் உங்களது துன்பங்களை நீக்கியருள ஓர் புதல்வனைத் தந்தருளுவோம என்று திருவாய்மலர்ந்தருளினார். தேவர்களும் தங்கள் பதிகளுக்குச் சென்றார்கள்.

ஒருநாள் இறைவனும் இறைவியும் மண்டபத்திலுள்ள சித்திரங்களைப் பார்வையிடச் சென்றார்கள். ஓர் மண்டபத்தில் பிரணவ அட்சரம் இருந்தது. அந்தப் பிரணவ அட்சரத்தை இறைவனும் இறைவியும் பார்த்தார்கள். சிவ ஆணையினால் பிரணவ அட்சரம் இரண்டு யானைகளாகச் சேர்ந்துநின்று காட்சிகொடுத்தது. இறைவன் திருவருளினால் அதன் மத்தியிலே ஐந்து கரமும் யானை முகமும் இந்தின் இளம்பிறைபோல ஏயிறும் உடைய ஓர் குழந்தை உதித்தது. இறைவன் குழந்தையை எடுத்து அம்மையின் கரத்திலே கொடுத்தார். இருவரும் குழந்தையை எடுத்துச்சென்று தங்கள் மடியில் வைத்து விநாயகன், விக்கினராஜன் என்ற திருநாமங்களைக் கூறி, நீ சகல ஜீவராசிகளுக்கும் முதல்வனாக இருக்கவேண்டுமென்றும். சகல ஜீவராசிகளும் உன்னையே முதலில் வணங்கவேண்டுமென்றும் திருவருள் செய்தார்கள்.

பெருமான் தோற்றத்தை அறிந்த தேவர்கள் மீண்டும் இறைவனிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறி, அவற்றை நீக்கியருள வேண்டுமென்று வேண்டுதல் செய்தார்கள். பெருமான் விநாயகக் கடவுளை அழைத்துத் தேவர்களுடைய துயரம்தீரக் கஜமுகாசுரனுடைய வலிமையைக் குறைத்து தேவர்களுக்கு அனுக்கிரகம் புரியுமாறு அனுப்பிவைத்தார். விநாயகப் பெருமான் பூத சேனைகள் புடைசூழச் சென்று கஜமுகாசுரனுடன் யுத்தஞ்செய்து இறுதியிலே தமது ஒரு கொம்பை ஒடித்து அவனுடைய மார்பு பிளக்கும்படி எறிந்தார். இரத்தம் சொரியும்படி

வீழ்ந்த கஜமுகாசுரன் சிவபிரானிடத்தில் முன்பு பெற்றுக்கொண்ட வரத்தினால் இறவாது மூஷிக வடிவெடுத்துச் சினத்துடன் விநாயகப் பெருமானுடன் யுத்தம் செய்யும்பொருட்டு வந்தான். வந்த மூஷிகத்தை விநாயகப் பெருமான் தமது திருவருள் நோக்கினால் அவனுடைய வினைகளை யெல்லாம் நீக்கி ஆட்கொண்டருளினார். இது கந்தப்புராணம் கூறும் விநாயகப் பெருமானது தோற்ற வரலாறு.

பொதுவாகத் தெய்வ வடிவங்களுக்கு நான்கு கரங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மனிதர்களிலும் பார்க்க இறைவன் ஆற்றல் மிகுந்தவர் என்பதைப் பல கைகள் இருப்பதன் மூலம் உணரலாம். தும்பிக்கையுடன் சேர்த்து விநாயகப் பெருமானுக்கு ஐந்து கைகள் இருக்கின்றன. இது பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்கிறார் என்பதை உணர்த்துகிறது. மேலும் விநாயகப் பெருமானுடைய உயர்த்திய இரு கரங்களிலும் பாசமும் அங்குசமும் இருக்கின்றன: யானைப் பாகன் அங்குசத்தினால் மதங்கொண்ட யானையை நேரான பாதையில் செலுத்திக் கயிற்றினால் கட்டுகின்றான். ஆன்மாக்களை நல்ல நெறியில் செலுத்துகிறார் என்பதைப் பாசத்தின்மூலமும் உணர்த்துகின்றார். மகாமேரு மலையில் பாரத சரித்திரத்தை எழுதுவதற்கும் கஜமுகாசுரனுடைய வலிமையைக் குறைப்பதற்கும் தமது வலக்கையிலுள்ள தந்தத்தைப் பாவித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. அது ஆன்மாக்களினுடைய மாய இருளை நீக்கி ஞான ஒளியைக் கொடுக்கின்றது என்பதைக் குறிக்கின்றது. மோதகம் பல சுவைமிகுந்த பொருள்களைக் கொண்டுள்ளது. பலவகைப்பட்ட ஆன்மாக்களையும் காத்து இரட்சிக்கின்றார் என்பதை இது குறிக்கிறது. பெரிய தோற்றத்தையுடைய விநாயகப் பெருமான் சிறிய எலியை வாகனமாகக் கொண்டுள்ளார். இது எங்கும் வியாபித்திருக்கும் இன்றவனை மிகச் சிறிய ஆன்மா தனது பக்தியினாலே தன்னுடைய உள்ளத்திலே தாங்கியிருக்கும் என்பதைக் குறிக்கின்றது. இவ்வாறு பெருமானது திருவுருவம் நிறைந்த தத்துவக் கருத்துகளை எங்களுக்கு உணர்த்துகிறது. இவ்வளவு தத்துவ இரகசியங்கள் அடங்கிய மூர்த்தியைத் திருமூலர் "ஞானக்கொழுந்து" என்றழைத்தார். அந்த ஞானக்கொழுந்தை உபாசிக்கும் வழியென்ன? அன்பினால் போற்ற வேண்டும்.

கொழுவியங்கலட்டிவாழ் பெருமக்களெல்லாம் பெருமானிடம் கொண்ட அன்பினாலே பெருவிழா எடுத்தார்கள். இன்று சித்திரத் தேரைச் செய்வித்தார்கள். இன்று விநாயகப் பெருமான் அந்தப் புதிய சித்திரத் தேரிலே வீதியுலா வருகின்றார். அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களித்து உள்ளன்போடு பெருமானது திருவடிகளை வணங்குவோம். அவரது திருவருளைப் பெற்றுக் கொள்ளுவோம்.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

# இரதோற்சவம்

சைவ ஆலயங்களிலே உற்சவ காலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தைக் குறிப்பதால், அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அருளுதற்காக வைக்கப்பட்டன என்று உணரப்படும்.

அனுஞ்ஞை, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், பேரீதாடனம், மூஷிகயாகம், அஸ்கிர தேவதாவாகனம், துவசாரோகணம், துவஜபீடபலி, சந்தியாவாகனம், வீதிபிரதட்சணம், கோபுரத்துவார நீராஞ்சனம், யாகமண்டப பூசை, திருக்கல்யாணம் என்னுங் கிரியைகள் 'சிருட்டி'யைக் குறிக்கும். வாகனோற்சவம், ஓமகருமம், பலி என்பன 'திதி'யைக் குறிக்கும். மிருகயாத்திரை, இரதாரோகணம், கிருஷ்ணகந்தார்ச்சனை என்னும் கிரியைகள் 'சங்காரத்'தைக் குறிக்கும். சூர்ணோற்சவம், தீர்த்தம், அங்குரவிசர்ச்சனம், யாக கும்பாபிஷேகம், துவஜாவரோகணம், மௌனோற்சவம், இரட்சாபந்தன விசர்ச்சனம், சண்டயாகம் என்னும் கிரியைகள் 'திரோபவத்'தைக் குறிக்கும். சத்தி யாத்திரை என்னும் ஊடல் சண்டேசுவரோற்சவம், ஆசாரியோற்சவம் என்னும் கிரியைகள் 'அனுக்கிரகத்'தைக் குறிக்கும்.

இவ்வாறுக உற்சவ பஞ்ச கிருத்தியம் ஆகமங்களிலே கூறப்படுகிறது. இந்த ஒழுங்குமுறையில் இரதோற்சவம் சங்காரத்தைக் குறிக்கும். முன்னொருகாலத்திலே, திரிபுரத்தசுரர்களின் கொடுமையைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். சிவபெருமான் போரிலே அசுரர்களின் வலிமையை அடக்கித் தருவதாகக் கூறியருளினூர். தேவர்கள் சுவாமி போருக்குச் செல்வதற்காக ஒரு தேரைச் செய்தார்கள்.

மந்தரகேசரி மலைகளை அச்சாகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், ஆறு இருதுகள் சந்தியாகவும், பதினுன்கு லோகமும் பதினுன்கு தட்டுகளாகவும், ஆகாசம் ஆசனமாகவும், உதயாத்த மலைகள் கூவிரமாகவும், நதிகள் கொடிகளாகவும், நக்ஷத்திரங்கள் விதானமாகவும், மோக்ஷலோகம் மேல்விரிப்பாகவும், அட்டமலைகள் தூண்க

ளாகவும், சப்த சமுத்திரங்கள் திரைச்சீலையாகவும், மனுசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், பிரமதேவன் சாரதியாகவும் — இவ்வாறுகச் சகல தேவர்களும் பங்குகொண்டு ஒரு தேரைச் செய்து கொடுத்ததாகவும், அதில் இறைவன் சென்று திரிபுரங்களை அழித்ததாகவும் புராணம் கூறும்.

திரிபுரத்து அசுரர் என்பது எம்மிடையேயுள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகும். இறைவன் தேரிலே சென்று தமது திருவருட் சிரிப்பினுல் திரிபுரத்தசுரர்களை அழித்தார். எமது மும்மலங்களையும் அழித்து எம்மை ஆட்கொள்ளுகிறுர் என்பது கருத்து.

தேவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இறைவனுக்குத் தேர் இயற்றியது போன்று கொழுவியங்கலட்டிவாழ் பெருமக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து விநாயகப் பெருமானுக்கு ஓர் உன்னதமான சித்திரத் தேரைச் செய்வித்தார்கள். அந்தத் திருத்தேரிலே இன்று விநாயகப் பெருமான் பவனிவந்து எங்களது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் ஒழித்து அருளுவார். நாங்கள் எல்லாம் விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளைக் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்குவோமாக.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானேரு மானைமுகத் தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.



**பவளக்கால் நாட்டல்**

திரு. சி. செல்லையா, திரு. சி. இராசதுரை (ஜெயா லைற் உரிமையாளர்)
செல்வன் ச. ஜெயராசா, Dr. T. இராஜேந்திரம் (பிரதமவிருந்தினர்)



**பிரதான சிற்பக் கலைஞர்கள்**

இடமிருந்து:

இ. இராசதுரை, மு. நாகலிங்கம், பிரதானஸ்தபதி ச. ஜெயராசா, சங்கரவேலு, நா. சபாரத்தினம், வே. நடராசா, செ. ஜேசுதாசன், ச. ஜெயகாந்தன், வே. பாலசுப்பிரமணியம், க. பாலசுந்தரம், ச. வேல்நாதன், ச ஜெயமோகன், க. கருணாநிதி

# தேர் ஊரும் சித்திவிநாயகர்

பாடலாசிரியன் : திரு: வே. மதிபாலசிங்கம், சைவப்புலவர்,
யா/வேலாயுதம் ம. வி., பருத்தித்துறை

கொழுவியங் கலட்டியுறை கோலமார் ஏரப்பர்
விழுமியத் தேரிவர்ந்து வீதிவந்தார் — எழிலார்ந்த
பண்ணும் பரதமும் பாடகரின் ஓசைகளும்
எண்ணுங்கால் இன்பமென்றே ஏத்து.

## ஆலயச் சிறப்பு

அருகுள்ள வயலெல்லாம் ஆமையினம் நகரும்
பெருகுள்ளம் படைத்தவர்போல் பொன்கதிர்கள் சாயும்
கன்னியரின் முகங்கண்டு கட்டழகில் நாணி
தாமரை முகம்புதைக்கும் தன்மை காணீரோ. 1:

செங்கரும்பும் செழுங்கமுகும் சேர்ந்துயர்ந்து வளரும்
தேன்மாவும் தேன்பலாவும் தீங்கனிகள் சிந்தும்
பசிமுக மடவாரின் மழலைக்குத் தோற்று
குயிலினமும பசுங்கிளியும் கூடிஅயல் ஒதுங்கும், 2.

வானூர்தி நிலையத்தில் வட்டமிடும் ஓசை
கோயில்மணி ஓசையுடன் கோலமுற ஒலிக்கும்
கணேசமூர்த்தி உறையுமிந்தக் கவின்கொண்ட சூழல்
கண்ணினையும் மனத்தினையும் கவர்ச்சியுடன் ஈர்க்கும் 3.

## தேரின் தோற்றம்

சிற்பசாத் திரத்திற்சேர்ந்த சீர்பெறு வரிசையாவும்
அற்புத அமைப்பினோடு வமைந்தது ஐயன்தேரே
சிகைதந்தம் சித்ரம்கீலம் சேர்குச்சி அக்ஷமாதி
மிகையான ஆறுறுப்பும் மிளிர்ந்திடும் இன்பம்என்னே. 4;

ஒன்பது தளங்கள்சேர்ந்து ஒருறுப் பமைந்தமற்றும்
நன்மணி யோசைநல்கும் நல்லின மணிகள்மாலை
கன்னல்தோ ரணமாதி கவின்மயிற் பீலிநாற்றி
இன்னரும் சிறப்பினோடு இயன்றது அப்பன்தேரே. 5.

தங்கத் ன் பூணணிந்து தயங்குவெண் கலையுடுத்து
மங்காத கண்ணொளியால் மயங்கும்மான் விழியாள்போல்
அன்னநடை போட்டு அழகாக ஆடிவரும்
மன்னன்வி நாயகன்தேரை மாநிலத்தீர் காண்மின்கள். 6.

## தேர் நகர்கிறது

இன்ப விநா யகன்வந்தான் ஈகைமிக்க ஐயன்வந்தான்
துன்பங்களை யகற்றத் தூயவன்தான் வந்தானே
அன்பர்களைக் காக்கும் அருள்ஒளி முகத்தினொடு
மன்னவன் வந்தான் யானைமுகத்தவன் வந்தானே: 7.

வந்தானும் வந்தான் வந்துதேரில் ஏறினனே
சுந்தரனைக் கண்டதும் தூயஅடி யார்கூட்டம்
சந்தமுள்ள இசைபாடிச் சாய்ந்தனவே நின்னடியில்
பந்த மகற்றநீ பரிந்துதான் வந்தனையோ 8.

பட்டுப்பூச் சிகள்போலப் பலவர்ண உடையணிந்து
மட்டுப்படாக் கொங்கை மயிலனையார் வந்தனரே
கட்டுஉடல் அமைந்த காளையரும் வந்தனரே
தட்டுப்பட் டுத்திரியும் முதியோரும் வந்தனரே 9.

நாதஸ்வர ஓசையிலே - அடியார்
நாவில் எழும் ஓசையிலே
கருணைக் கணபதியின் - திருக்கண்
அருளின் ஒளிதான் என்னே 10.

தேரின் அசைவினிலே - அடியார்
தெய்வீக ஓசையிலே
வக்கிர துண்டனரின் — வயிறு
குலுங்கும் அழகு என்னே 11.

தம்பிக்குத் தருணிதந்தான் - இன்பத்
தும்பிக்கை விநாயகனே
எத்திக்கு மேதமிழை - வளர்க்க
இன்னருள் புரிந்திடாயோ 12.

தந்தைவைத்த போட்டியிலே தம்பி முருகவேளைச்
சிந்திக்க வைத்துச் சிறந்தமாங் கனியைப்பெற்ற
எந்தம்மை ஆளுடைய எமபெருமான் ஊர்ந்துசெல்லும்
தந்தத்தேர் இதுவாகும் தரணியுளோர் தாமறியின் 13.

சித்திரத் தேரேறிச் சீர்கருணைக் கண்ணோடு
பத்தி செலுத்தியிடும் பண்படியார் கூட்டமுடன்
வீதி வலம்வந்தார் வித்தகர் விநாயகரே
வீதி வலம்வந்தார் வித்தகர் விநாயகரே 14.

## வாழி விருத்தம்

அன்புள்ள உள்ளம் வாழி! அடியார்கள் வாழிவாழி
இன்பத்தேன் அருளைத்தந்த ஈசன் ஏரம்பன் வாழி
பன்னிறத் தோற்றம்கொண்ட பரிதித்தேர் வாழிவாழி
பொன்னினை யொத்ததேரை அமைத்தசிற் பிபரும்வாழி! 15.

உ
சிவமயம்

# மயிலிட்டி வடக்கு கொழுவியங்கலட்டி அருள்மிகு விநாயகப் பெருமான்மீது பாடிய திருவூஞ்சல்

## காப்பு

சீர்மேவு யாழ்ப்பாண தேயந் தன்னில்
செல்வமலி மேலோர்கள் சேர்ந்து வாழும்
ஏர்மேவு சோலையுடன் கழனி சூழும்
இசைமேவு மயிலைநகர் வதனம் போலும்
பேர்மேவு கொழுவியங்க லட்டி வாழும்
பிறைமருப்பார் கயமுகன்மே லூஞ்சல் பாட
நிர்மேவும் அவன்அருள்சேர் விழியின் நோக்கும்
நிறையருள் யாம்பெற நெஞ்சில் நினைகுவோமே:

## நூல்

மஞ்சாரும் பவளமணிக் கால்கள் நாட்டி
வயிரமணி யால்வலிய வளைகள் நீட்டிச்
செஞ்செவியார் மாமணியால் விட்ட மோட்டித்
திகழொழியார் முத்து வடக்கயிறு மாட்டி
விஞ்சுமெழிற் காஞ்சனத்தாற் பலகை பூட்டி
மேதகச்செய் யூஞ்சலிடை இனிதே மேவி
அஞ்சாரும் கொழுவியங்க லட்டி வாழும்
ஐங்கரனே அன்பினொடும் ஆடீர் ஊஞ்சல்.

ஈசனருள் நான்மறையும் கால்க ளாக
இசைமே வாறங்கங்கள் விட்ட மாக
ஏசலில்சீர்க் கலைக ளெல்லாம் கயிறதாக
எய்தரிய பிரணவம்பொற் பலகை யாகத்
தேசார வேய்ந்திடுபொன் னூசல் மேவித்
திகழ்கொழுவி யங்கலட்டி சேவை செய்ய
ஆசைஉள்ளார்க் கருள்புரிந்தே யல்லல் நீக்கும்
அணிமருப்பா ஐங்கரனே யாடீர் ஊஞ்சல்.

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்கத்
தருமன்இயல் வேத்திரங்கை தாங்கி யேந்த
இந்திரனும் சோமனும்மா கவரி வீச
இறைவருணன் நீர்தூவும் துருத்தி யேந்தக்

கந்தருவர் கீதஇசை பாடி யாடக்
காமருசீர் அரம்பையர்கள் நடன மாட
இந்திரைவாழ் கொழுவியங்க லட்டி யுள்ளார்
ஏத்தவரு ஐங்கரனே யாடீர் ஊஞ்சல்.

தேசுலவு படிகமணித் தூண்க ளாக்கித்
திகழ்வயிர மணியதனால் வளைகள் வீக்கி
வீசுமெழில் மரகதத்தால் கழிகள் போக்கி
விளங்குறுபொற் தகடதனல் கூரை தேக்கி
வாசமுறு பட்டதனல் விதான மாற்றி
வனைதந்த மண்டபத்தே யூஞ்சல் மேவி
ஆசகலுங் கொழுவியங்க லட்டி மேய
ஐங்கரனே யருள்பெருக ஆடீர் ஊஞ்சல்;

மறைமுதலின் வடிவுடைமா தேவே யெங்கள்
வல்வினையைப் போக்கவருள் மறைநேர் கண்டாய்
கறைமிடற்றோன் தனைநொடியில் வலமாய் வந்து
கையிலுறு மாங்கனியைக் கவர்ந்த தீரா
பிறைநேரு மொருகோடும் முறநேர் காதும்
பெருமுதர மும்உடையாய் அடியார் ஏத்த
நிறைசெல்வக் கொழுவியங்க லட்டி யுள்ளார்
நெஞ்சில்நிறை ஐங்கரனே யாடீர் ஊஞ்சல்.

திருமாலும் அயனுமுனம் தேடிக் காணச்
சிவனிவரும் தேரச்சைச் சிதைத்த தேவே
உருகுமனத் தடியார்கள் உள்ளம் நீங்கா
துறுபோக மவர்க்கருளும் ஒவா அன்பே
பெருநிதியும் பேர்அறிவும் ஞானப் பேறும்
பேசுவச்ர காயமுந் தந்தருளுந் தேவே
திருநிறைநற் கொழுவியங்க லட்டி யுள்ளார்
தீங்ககல ஐங்கரனே யாடீர் ஊஞ்சல்.

சீலமிகு நம்பிதன்மேற் கருணை கொண்டு
சிறந்தமறை யருள்செய்த தேவ தேவே
ஞாலமுதல் உலகருள்சோரன் கௌரி யோடு
நாட்டமிகும் புன்முறுவல் நயந்தே காட்டக்
கோலமிகும் முருகனுடன் ஞாழி ஊர்தி
கூர்வீர தேவனும் கும்பிடுதல் செய்ய
ஏலமிகு கொழுவியங்க லட்டி வாழும்
ஏற்றமுள ஐங்கரனே யாடீர் ஊஞ்சல்.

நாட்டமிகும் இந்திரன்கா நலிந்தே வாட
நல்லகுறு முனிகலசக் கங்கை தன்னை
வேட்டலுடன் கவிழ்த்ததனை வளர்த்த செல்வா
வேலனுடன் வள்ளியை வீற்றிருக்க வைத்தாய்

தேட்டமுள்ள சிறியேம்வல் வினையைப் போக்கி
சிரசுதனிற் குட்டஅருள் செய்யும் தேவே
ஈட்டுபுகழ்க் கொழுவியங்க லட்டி வாழும்
இன்னல்களை ஐங்கரனே ஆடீர் ஊஞ்சல்;

சித்திபுத்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்
செவ்வேளின் முன்னவனே யாடீ ரூஞ்சல்
பத்தந்துயர் களைபவனே யாடீ ரூஞ்சல்
பரமன்சிறு பாலகனே யாடீ ரூஞ்சல்
மெத்தும்எழில் ஐங்கரனே யாடீ ரூஞ்சல்
மேருவிற்பா ரதம் பொறித்தோ யாடீ ரூஞ்சல்
கத்துபுனற் கொழுவியங்க லட்டி வாழும்
கவலைதீர் ஐங்கரனே யாடீ ரூஞ்சல்.

## வாழி

ஓதுமறை அந்தண ரானினமும் வாழி
உயர்சைவ நெறிவழுவா துலகில் வாழி
நீதிபுரி யரசர்செங் கோலும் வாழி
நெஞ்சமகிழ் மங்கையர்கள் நிறையும் வாழி
சாதுதவ முனிவரினம் தானும் வாழி
தண்ணளிசேர் வேள்விவிழா தரணி வாழி
ஓதுகொழு வியங்கலட்டி உள்ளார் வாழி
உயராகு வாகனமும் வாழி வாழி.

## எச்சரிக்கை

அயன்மால் சுரர்தேடற்கரும் அண்ணு எச்சரிக்கை
அரன்மாதுமை மூதற்றந்திடும் ஐயா எச்சரிக்கை
கயமாமுகன் மதம்நீக் கருட்கடலே எச்சரிக்கை
கருதித்தொழு மடியார்க்கருள் களிறே எச்சரிக்கை.

அறுமா முகன்முதற் றேன்றிய அண்ணு எச்சரிக்கை
அருமா மறைமுத லாகிய ஆதீ எச்சரிக்கை
குறமாதினை முருகற்கருள் கோவே எச்சரிக்கை
கொடியேம்வினை பொடியாக்கருட் குன்றே எச்சரிக்கை.

## பராக்கு

தூங்கு துதிக்கையுடைய தூயா பராக்கு
சொல்லுதுந்க் குய்வருள்செய் தொல்லோய் பராக்கு
ஓங்குநுதற் கண்ணுடைய ஒருவா பராக்கு
உள்ளுமவர் உள்ளமதில் உறைவோய் பராக்கு.

அரிபூசை யேற்றருள்செய் அமலா பராக்கு
அரனாரின் திருத்தோளில் அமர்வாய் பராக்கு
தெரிகலைகள் நம்பிக்குத் தெரித்தாய் பராக்கு
திருக்கொழுவி யங்கலட்டி சேர்ந்தாய் பராக்கு.

## மங்களம்

ஆகாமெழில் வாகனற்கு மங்களம் — எங்கள்
அத்திமுக ஐங்கரற்கு மங்களம்
போகாமயல் போக்குவோர்க்கு மங்களம் — சித்தி
புத்தியருள் தேவனுக்கு மங்களம்.


குறிப்பு :

இத் திருவூஞ்சற் பாட்டு 1950 ஆம் ஆண்டு சிவதொண்டுபூண்ட சைவர் ஒருவராற் பாடப்பட்டது. இப் பாடல்கள் புத்தக வடிவில் இல்லாமையால் அடியார்கள் வாய்ப்பாட்டாகவே இதுவரைகால மும் பாடிவந்தார்கள். இப்பொழுது இப்பாடல்களில் ஏற்பட்ட சொற்பிழைகள் சிலவற்றைத் திருத்தியும், மேலும் எச்சரிக்கை, பராக்கு, மங்களம் முதலிய பாடல்களைப் பாடியும் எமக்கு உதவிய பெரியார் மயிலிட்டி தெற்கில் வசிப்பவரும் வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையா அவர்களின் நன்மாணாக்கரும் சைவப் பெரியாரு மாகிய இ. நமசிவாய தேசிகர் அவர்களாவர்.

***



பண்டிகை வேலைக்காட்சி
பந்தல் வேலைக்காட்சி



அடித்தளக் காட்சி



அச்சுவைத்தபோது பிரதம விருந்தினராக வருகைதந்து
எம்மைச்சிறப்பித்த திரு. க. ஜெயபாலசிங்கம் அவர்கள்
(முன்னாள் பட்டினசபைத்தலைவர், காங்கேசன்துறை.)

# காணுபத்திய நெறி

**வ. குமாரசாமி,**
நூலகர், பட்டினசபை, காங்கேசன்துறை.

இந்து சமயத்திலேயுள்ள சாத்திரிக வழிபாட்டு முறைகளிலே காணுபத்திய நெறியும் ஒன்ருகும். இந்நெறி விநாயக வழிபாடுபற்றியும் அதன் தத்துவங்கள் பற்றியும் சிறப்பித்துக் கூறுகின்றது.

ஓம் என்ருெலிக்கும் ஓங்காரத் தொலியே இப் பிரபஞ்சோற்பத்திக்கும் அதன் வியப்புறு இயக்கத்திற்கும் அதன் ஒடுக்கத்திற்கும் மூலகாரணமாக அமைந்துள்ளது. ஓமின்றி ஒன்றில்லை. சர்வமும் ஓம்மயமே. ஓம் என்ற பிரணவட்சரமே தேவதைகளின் பிறப்பிடமாகவும் வேத மந்திரங்களின் உயிர்நாடியாகவும் திகழ்கின்றது, இவ்வோங்கார வடிவமாகத் திகழ்பவரே கருணைவள்ளலாகிய விநாயகப் பெருமான். இப் பிரபஞ்சத்தின் வித்தாக விளங்குகின்ற இவ் வித்தக விநாயகன் ஞானத்தின் திருவுருவாக, ஞானனந்த மலையாக விளங்கி ஆன்மாக்களுக்கு முத்தியின் பத்தை யருளுகின்ருன். ஒருதரம் ஓம் என்று உரைத்திடின் அவன் கருணை எம் உள்ளத்தில் ஓடிப் பெருகுவதை உணரலாம், மிகப் பழமைவாய்ந்த இந்து புராணங்களிலே விநாயகப்பெருமானை பிரமச்சாரிய தேவனுகவே கூறப்படுகின்றது. ஆனுல் பிற்கால சமய புராணங்களில் சித்திபுத்தி நாயகனெனக் கூறப்படுகின்றது. இச் சக்திகளைத் தத்துவார்த்தமாக உணரும்பொழுது ஞானத்திற்கும் வெற்றிக்கும் விநாயக வழிபாடு இன்றியமையாததென்பது புலனுகின்றது. கணபதியை வேறும் பல சக்திகளுடன் சேர்த்து பற்பல நாமங்கள் சூட்டி வழிபடுகின்றனர்.

விநாயக அவதாரம்பற்றி வராகபுராணத்தில் சிவனது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றினுரெனவும், சுப்பிர வேதாகமத்தில் சிவனும் பார்வதிதேவியும் இரு யானைகளாக உருமாறியிருந்தபொழுது அவதரித்தாரெனவும், மச்சபுராணம் கந்தபுராணம் ஆகியவற்றில் பார்வதிதேவி நீராடும்பொழுது உபயோகித்த வாசனைத் திரவியங்களிலிருந்து படைக்கப்பட்டாரெனவும் இப்படியாகப் பல புராணங்களிலே பலவகையாகக் கூறப்படுகின்றன. வேத சிவாகமங்களிலுள்ள பழமையான கருத்துக்களை மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் உருவகித்துக் காட்டுவதே புராணங்களின் நோக்கமாகும். புராணங்கள் பலவகையாகக் கூறினுலும் விநாயகர் ஓங்கார வடிவமானவ ரென்பதில் கருத்தொருமைப்பாடு நிலவுகின்றது. இங்கே புராணங்களில் மிளிரும் தத்துவார்த்தங்களை உணர்வதே சான்ருேர் கடமையாகும்.

நாம் படும் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணமாக அமைவது நாம் முற்பிறவியில் செய்த தீவினைகளே, இவ்வினைகள் மற்ற மூர்த்திகளை வணங்குவதாலும் அற்றுப்போகும். ஆனுல் விநாயகப் பெருமானை வணங்குவதால் எம்வினைகள் வேருடன் களைந்தெறியப்படுகின்றன. இதனுலேயே கவிதேவநாயனுர் ''விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்'' என விநாயகப் பெருமானின் கருணைத் திறனை வியந்து பாடியுள்ளார். விநாயகரது பெருமையும் கருணைத் திறனும் சொல்லுக்கும் எழுத்துக்கும் அடங்காது. இப்படிப் பெருங்கருணைவாய்த்த விநாயகப் பெருமானுக்கு மக்கள் ஆற்றங்கரைகளிலும் சந்துபொந்துகளிலும்

புனிதமர நிழலின்கீழும் மற்றும் பல இடங்களிலும் சிறிதாகவோ பெரிதாகவோ ஆலயங்களை அமைத்து வழிபாடாற்றிவருகின்றனர்.

சைவசமயத்திலே வழிபடப்படும் மூர்த்திகளுக்குப் பல பெயர்கள் இருப்பதைப்போன்று விநாயகப் பெருமானுக்கும் அவரின் உருவத்தையும் தொழிலையும் உணர்த்துமுகமாகப் பல திருநாமங்கள் அமையப்பெற்றுள்ளன. சிவகணங்களுக் கதிபதியாக இருப்பதால் கணபதி, கணநாதர், கணேசர் எனவும், யானைமுகனாக இருக்கின்றபடியால் கஜானனர் எனவும், வளைந்த துதிக்கை உடையபடியால் வக்கிரதுண்டர் எனவும், ஒரு துதிக்கையுள்ளபடியால் ஏகதுண்டரெனவும், பானை வயிற்றோனாக இருக்கின்றபடியால் லம்போதரரெனவும், அருள்வேண்டி நிற்பவர் களுக்கு வெற்றியளிப்பவரானபடியால் சித்திதாதா எனவும், விக்கினங்களைத் தீர்க்கின்றவரானபடியால் விக்கினேஸ்வரர் எனவும் போற்றப்படுகின்றார்.

விநாயகர் சந்நிதியிலே சிரசில் குட்டிக்கொள்வதற்கும், தோப்புக்கரண மிடுவதற்குமுரிய காரணங்களையும் விநாயகப்பெருமான் புரிந்த திருவிளையாடல் களையும் விநாயக புராணத்திலே மிகத் தெளிவாகக் காணலாம். விநாயகர் சந் நிதியிலே நாங்கள் புரியும் மேற்கூறிய செயல்களினாலே எங்களுடைய அறிவுநாடி விளக்கமுற்று அதனால் அறியாமை விலகி அறிவொளி உண்டாகின்றது. விநாய கப் பெருமானுக்கு முக்கனிகள் அப்பம், அவல், எள்ளுருண்டை, மோதகம், கரும்பு முதலிய தித்திப்பான நைவேத்தியங்களை நிவேதித்து அறுகு, வன்னி, மந் தாரை மலர் ஆகியவற்றால் அர்ச்சித்து வழிபட்டால் அவருடைய அளப்பரிய கருணையை மிகவிரைவில் பெற்றுய்யலாம். இவர் கஜமுகாசுரனைச் சம்மாரஞ் செய்து அவனை மூஷிகமாக்கித் தனது ஊர்தியாக்கிக்கொண்டாரெனவும் புரா ணங்களில் கூறப்படுகின்றது.

சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயகசஷ்டி விரதமென் பன விநாயகருக்குரிய விரதங்களாகும். இவ் விரதநாட்களிலே விநாயகனை நினைந்து விரதமிருப்பவர்கள் விநாயகருடைய திருவருட் கடாட்சத்தைப் பெற்று அட்ட ஐஸ்வரியங்களுடனும் வாழ்வரென்பதில் சிறிதளவேனும் சந்தேகமேயில்லை.

''வேதாந்த — கீதம் புருஷம் பஜேஹம்
ஆத்மானம் ஆனந்த கனம் ருதிஸ்தம்
கஜானனம் யம் — மகசா ஜனனும்
மகாந்த காரோ விலயம் பியாதி''

யானைமுகக் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன், அவன் வேதாந்தங்களில் புகழப்படும் புருஷன். இதயத்தில் வீற்றிருக்கும் ஆனந்தமயமான, பொருளான ஆன்மா. மக்களைச் சூழ்ந்துள்ள பேரிருளான அரியாமை அவன் மகத்துவத்தால் விலகியோடும்.

விநாயக அடியார்களின் அன்புப் பணியால் நிறைவெய்திய சித்திரத் தேரினிலே எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் ஞான முதல்வனாகிய விநாயகனை உள்ளன்புடன் வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்றுய்வோமாக.

—o—

உ
சிவமயம்

கலாகேசரி, கலாலய அதிபதி, சித்திர வட்டாரக் கல்வியதிகாரி

**திரு. ஆ. தம்பித்துரை அவர்களின் மாணவனும்**

வடமயிலை சரவணன் கவின் கலையகம்

**திரு. கா சரவணமுத்து அவர்களின்**

சிரேஷ்ட புதல்வனுமாகிய

# திரு. ச. ஜெயராசா அவர்கள்

வடமயிலை கொழுவியன்கலட்டி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயச்

**சித்திரத் தேரை உருவாக்கியமைகுறித்து**

**அவ்வூர் மக்கள் உவந்தளித்த**

# வாழ்த்துப்பா மலர்

## நேரிசை வெண்பா

சீர்குலவு செம்மல் ஜெயராசன் செல்வமெலாம்
பார்புகழப் பெற்றுப் பலகாலம் – ஏர்குலவி
உத்தமனாய் ஆனைமுகத் தையன் அருளணைந்தே
இத்தலத்து வாழி இனிது.

## ஆசிரிய விருத்தம்

செந்தமிழ் குலவு நீர்மைத் திருநகர் யாழ்பா ணத்து
முந்தையூர் மயிலை வாழும் மூதறி வாளர் போற்ற
வந்தவோர் மைந்த நன்று வளர்ஜெய ராசன் நீயே
இந்நிலத் திரவி யென்ன என்றுநீ வாழி வாழி.

கார்நிகர் கையன் சிற்பக் கலையினின் சுவையு ணர்ந்தோன்
பார்நிகர் பொறையன் பண்பின் படிவமா யமைந்தோன் நன்று
தேர்தனை ஆக்கித் தும்பி வலம்வரு வழியி னின்றான்
சீர்பெறு வளமிக் கோங்கு செம்மை சேர்ந்தென்றும் வாழி.

திருநகர் மயிலே முன்னர் செய்தவப் பயனீ தென்னப்
பொருவருஞ் சர(வ)ணமுத்து பொற்கொடி மகேசணைந்து
தருமகன் ஜெயரா சப்பேர் தாங்கிநீ கலால யத்து
ஒருபெருந் தலைவன் தம்பித் துரைக்குரு பெற்றுய் வாழி.

கொழுவியன் கலட்டிக் கோவுக் கொப்பிலாச் சித்திரத்தேர்
வழுவெது மின்றிச் செய்து வாழ்த்துக்கள் பலவ டைந்தாய்
உழுதுவாழ் மக்கள் மத்தி உறைகய முகனின் பாதம்
பழுதிலா வண்ணம் பற்றிப் பலநலம் பொருந்தி வாழி.

வாழிபல் லாண்டு சிற்பக் கலைஞனே சிறந்து வாழி
ஆழிசூ முலகத் தையற் கற்புதத் தேர்ச மைத்துத்
தாழியுள் விளக்க மன்றித் தகுகுன்றின் தீப மாகி
ஊழிதோ றாழி உம்பர் உயர்வினுக் குழைத்து வாழி.

## கட்டளைக் கலித்துறை

ஊருணி நீர்நிறைந் துண்பவர் துய்த்திடத் தங்குமாபோல்
தேரு மடியவர் தீம்பசிக் கின்னமு தீந்துபல்லாண்
டாரும் பெறுநல மாம்வகை யெய்திடத் தும்பிமுகன்
சீருடைப் பாதந் தினமும் பரவுதும் தேருகவே.

சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
கொழுவியன்கலட்டி,
மயிலிட்டி, 1979-09-01.

ஆலய பரிபாலன சபையினர்

## CHANDRAN

ELECTRO - PLATING WORKS

PIONEERS

IN ALL KINDS OF

ELECTRO PLATING

68, MANIPAY ROAD,
JAFFNA.

## VENUS TRADE

GENERAL MERCHANTS

&

COMMISSION AGENTS

No. 77. 4th, CROSS STREET,
**COLOMBO-11.**

## வீனஸ் டிரேட்

V. T.

மொத்த வியாபாரியும்
கமிஷன் ஏஜெண்டும்.

இல. 77, 4ஆம், குறுக்குத்தெரு,
கொழும்பு 11.

எங்களிடம்

* சூட்கேஸ்
* றங்பெட்டி
* மெத்தை
* தலையணை
* திறம் தேயிலை

பெற்றுக்கொள்ளலாம்.

## ஆ. தி. சம்பந்தர்

56, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்

மங்கள நிகழ்ச்சிகள்,
கலைவிழாக்கள்,
நாடகங்கள்,
கோவில் திருவிழாக்கள்
மற்றும் நிகழ்ச்சிகளுக்கும்

மிகத்திறமையான ஒளி அமைப்பாளர்கள்

# ஜெயா ஒளி அமைப்பாளர்

மயிலிட்டி.

எங்களிடம்
பலசரக்கு சாமான்கள்
மாட்டு உணவுவகைகள்
கோவில் அபிஷேகத்
திரவியங்களும்

சகல பொருட்களும் குறைந்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## பொன். நடராசா

இல: 49, சந்தை,
சுன்னாகம்.

உங்களுக்குத் தேவையான
விவசாய
இரசாயன உரவகைகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

## ராஜா ஸ்ரோர்ஸ்

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

எலக்ட்ரிக் & காஸ் வெல்டிங்ஸ்

விரும்பிய டிஸைன்களில் கேற்றுக்கள், கிறில்கள் மற்றும்

நெல் அவிக்கும் ராங்குகள், இயந்திர வேலைகள்,

இரும்பு, உருக்கு, சீனச்சட்டி வேலைகள்

மீன்பிடி வள்ள உதிரிப்பாகங்கள் குறிப்பிட்ட தவணையில்

உறுதி உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



## ராஜன் வெல்டிங் தொழிற்சாலை

மீசைக் கராச்

**பருத்தித்துறை விதி — காங்கேசன்துறை**

---

பூட்டு, பிணைச்சல், பெயின்ற்
வகைகள், வள்ளச் சாமான்கள்,
சயிக்கில் பாட்ஸ், ஆணி வகைகள்
அலுமினியப் பாத்திர வகைகள்

எம்மிடம்

நிதான விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்

## குமார்

### ஹாட்வெயர் ஸ்ரோஸ்

**பருத்தித்துறை வீதி**
**மயிலிட்டி**

---

பரம்பரை வைத்தியர்,
விஷேடமாக வாதரோகம்,
சிறுபிள்ளை வைத்தியம்,
எண்ணை வகைகள்.

**நோயாளர் தங்குமிட வசதி
உண்டு.**

### வீ. பஞ்சாட்சரம்

ஆயுள்வேத வைத்தியர்
D. A. M. & S. (Cey.)
சஞ்சீவினி.

**பலாலி**
**காங்கேசன்துறை**

சிறந்த எவர்சில்வர், அலுமினியம், செம்பு பாத்திரங்கள்
கோவில் கொடிஸ்தம்பம், கலசம். மணி உற்பத்தியாளர்.
உத்தரவாதத்துடன் நிக்கல், குரோமியம், வெள்ளி
பூச்சுகள் செய்யுமிடம்.

# பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

251 (107) காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

**தி மலாயன் டிறேடிங் கம்பனி**
130, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 547

அன்பளிப்பு

**சந்திரா அச்சகம்**
151, யாழ்ப்பாண வீதி
காங்கேசன்துறை

அன்பளிப்பு

தித்திக்கும் பல்சுவையுள்ள

கண்ணா ரொபி

இனிப்பு வகைகளுக்கு

நாடுங்கள்



## கண்ணா புறடக்ஸ்

சுன்னாகம்

அன்பளிப்பு

## சிவாஸ் கூல் பார்

கே. கே. எஸ். வீதி

சுன்னாகம்

கிளை ஸ்தாபனம்

## கணபதி ஸ்ரோஸ்

இல. 27, மத்திய சந்தை

சுன்னாகம்

எங்களிடம்

வாட்டர் பம் — இணைப்பு உபகரணங்கள்

இரும்புச் சாமான்கள் — பூட்டுப் பிணைச்சல்கள்

பெயின்ற் — எஸ்லோன் பைப் முதலியன

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பைப் வகைகள் விரும்பியபடி

பொருத்திக் கொடுக்கப்படும்.

## ஈஸ்வரி ஹாட்வெயர்ஸ்

சுன்னாகம்

## அன்பளிப்பு

**சாந்தா ரான்ஸ்போட் சேவிஸ்**

உரிமையாளர் :

**ஐ. வைரமுத்து**

**மயிலிட்டி வடக்கு**

**காங்கேசன்துறை**

## அன்பளிப்பு

**க. வி. துரைச்சாமி அன் சன்ஸ்**

ஜெனரல் மேச்சன்ற், கொமிஷன் ஏஜன்ற் அன் ருன்ஸ்போட் ஏஜன்ற்

**லக்ஷ்மி திலகம்**

**மயிலிட்டி**

மழலைகள் மகிழ்ச்சியே உங்கள் மகிழ்ச்சி.
அவர்களை மகிழ்விக்க அழைத்துச் செல்லுங்கள்

## குணம் கிறீம் ஹவுசுக்கு

நாவிற்கு அதிகம் சுவையைத் தருவது குணம் கிறீம் ஹவுசின் உற்பத்திப் பொருட்களான

**ஐஸ் பழம், ஐஸ் சொக், ஐஸ் கிறீம், ஐஸ் சர்பத்**

முதலியன.

'குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை விரும்பிச் சுவைப்பது குணம் கிறீம் ஹவுசின் உற்பத்திப் பொருட்களையே.
சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் எமது உற்பத்திப் பொருட்களை குணம் கிறீம் ஹவுஸ் விற்பனை வாகனத்தில் பெற்று மகிழுங்கள்.

## குணம் கிறீம் ஹவுஸ்

**பருத்தித்துறை வீதி**

**மயிலிட்டி**

எங்களிடம் சகலவிதமான
மருந்துச் சரக்கு வகைகளும்,
கோவிலுக்குரிய அபிஷேக
சாமான்களும், வீட்டு அத்திவாரச்
சாமான்களும், சரக்கு வகைகளும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**C. S. KANAPATHIPILLAI**
**& SONS**
81, K. K. S. ROAD
JAFFNA

பலசரக்குச் சாமான்கள்,
வாசனைத்திரவியங்கள், வெளிநாட்டு
உள்நாட்டு மதுபானவகைகள்,
சாய்ப்புச் சாமான்கள் மொத்த
மாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**SUNDARAM'S**
GENERAL MERCHANTS
PALALY

**SUNDARAM'S**
FOREIGN LIQUOR SHOP
PALALY, K. K. S.

பட்டு வகைகள்

சேட்டிங் வகைகள்

சாறி வகைகள்

கைத்தறிப் புடவைகள்

**ஜெயலட்சுமி புடவை மாளிகை**
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை

உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனையாளர்

# அரசன் கொம்பனி

72-A, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.

தொலைபேசி இல: 29407

கிளைகள் :

## அரசன் கொம்பனி

55, கந்தசாமி கோவில் வீதி

வவுனியா

உரக்கூட்டுத்தாபன ஏக விற்பனையாளர்

## அரசன் கொம்பனி

5, புகையிரத நிலைய வீதி

கிளிநொச்சி

# நன்றியுரை

வணக்கம்.

விநாயகப்பெருமானுக்குச் சித்திரத்தேர் ஒன்று செய்யவேண்டுமெனப் பெருமக்கள் விருப்பத்திற்கிணங்க திரு. இ. செல்லத்துரை குடும்பத்தினர் தங்கள் உடல் வருத்தத்தையும் நோக்காது தேர்த் திருப்பணிக்காக முழுநேரத்தையும் செலவுசெய்தார்கள். அவர்களுக்கு விநாயகப் பெருமான் அருள் பாலிப்பாராக. அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் கொழுவியங்கலட்டிவாழ் பெருமக்கள் சார்பில் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேண்டிய வேண்டிய நேரமெல்லாம் பணஉதவி, சரீரஉதவி, பொருளுதவி தந்து திருப்பணியை நிறைவுபெற உதவிய கொழுவியங் கலட்டிவாழ் பெருமக்களுக்கும்,

அச்சு பார்வைப்பு விழா, பவளக்கால் நாட்டுவிழா, பந்தல் வைப்புவிழா, விக்கிரகக்கட்டை வைப்புவிழா, தேர்முட்டி அத்திவாரக் கல் நாட்டுவிழா ஆகியவற்றில் கலந்துகொண்டு விழாக்களைச் சிறப்பித்த யாவருக்கும்,

தேருக்குத் தேவையான இரும்புவேலை, கட்டட வேலை, மர வேலைகள், வர்ணவேலைகள் செய்து தேர்த்திருப்பணிவேலை நிறைவுற உதவிய தொழிலாளர்கள் யாவருக்கும்,

சித்திரத்தேரை அழகுற அமைக்கக் காரணராக இருந்த பிரதம ஸ்தபதி செல்வன் ச. ஜெயராசா அவர்களுக்கும், திருப்பணி வேலைக் குத் தேவையான பணத்தைப் பலரிடமும் சென்று சேகரித்து உதவிய திரு. இ. செல்லையா அவர்களுக்கும்,

கடைச்சல் வேலைக்குத் தேவையான ஒளி வசதியையும், மின்சார வசதியையும் தந்துதவிய திரு. இ. இராசதுரை ஐயர் அவர்களுக்கும், ஆசிச்செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் தந்துதவிய பெரியார் களுக்கும்,

புகைப்படங்கள் எடுத்துதவிய சுன்னுகம் சித்திரகலா ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும், அச்சுக்கட்டைகள் செய்துகொடுத்த யாழ்ப் பாணம் கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும், குறித்த நேரத் தில் மலரை அச்சிட்டுதவிய சுன்னுகம் சக்தி அச்சகத்தாருக்கும், இன்னும் பலவழிகளிலும் உதவிபுரிந்த யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவிக்கின்றேன்.

சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள்
தேவஸ்தான பரிபாலன சபையினருக்காக

கூட்டுறவாளர்களே! நாட்டுயர்வுக்காக

தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை
உள்ளூராட்சிமன்றத் தொழிற்பரப்படங்கலும்
சேவைபுரியக் காத்திருக்கின்றது

# தெல்லிப்பழை
# பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

தங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய
நுகர்ச்சிப் பொருள்கள், புடவைத் தினிசுகள்,
உபகரணங்கள் - கிருமிநாசினிகள், கோழித்தீன் வகைகள்
கட்டடப் பொருள்கள், எரிபொருள் வகைகள்,
பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள்
உபகரணங்கள்
ஆகியவற்றை விற்பனை செய்கின்றது.

கிராமிய வங்கி மூலம்
* சேமிப்பைப் பெருக்குதல்
* கடன் வசதி அளித்தல்
ஆகிய சேவைகளைச் செய்கிறது.

சங்கத்துச் சேவையைப்பெற்று, உங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய முந்துங்கள். பயன் உங்களுக்கே.

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை

தொலைபேசி இல. கண்ணுகம் 343